DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC. No 703/2022 Crime No. 120/2020 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW 12- செந்தில்குமார் | Village | |
| Father's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 30.04.2025 |

**எதிரி ஆஜர்**

**13.11.2024 ம் தேதியின் முதல் விசாரணை தொடர்ச்சி**

கடந்த 27.04.2022 ம் தேதியிட்ட மாண்பமை ஈரோடு மாவட்ட முதன்மை நீதிபதி அவர்களின் செயல்முறை ஆணை A.No.171/2022, D.No.3512/2022 ன் படி நான் மாண்பமை பவானி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அலுவலகத்தில் உள்ள CCTV யின் பதிவான 21.03.2022 முதல் 24.03.2022 தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை பதிவான நிகழ்வுகளை 6 DVD களில் பதிவிறக்கம் செய்து அதனுடன் இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 65 ன் கீழான சான்றிதழுடன் மாண்பமை ஈரோடு மாவட்ட முதன்மை நீதிபதி அவர்களிடம் ஒப்படைத்தேன். அதனை மாண்பமை நீதிபதி அவர்கள் 23.08.2022 தேதியிட்ட செயல்முறை ஆணை A.No.171/2022, D.No.6781/2022 ன் படி புலன் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்தார். **மேற்கண்ட 6 DVD கள் அ.சா.ஆ.3 ஆகவும், இந்திய சாட்சிய சட்டப் பிரிவு கீழான சான்றிதழ் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

21.06.2024 ம் தேதியன்று, மேதகு நீதிமன்றமும், இந்நீதிமன்றமும், நீதிமன்றத்தின் முன்பு 116 பக்கங்கள் CMP.No.5476/2022 , நாள் 27.03.2023 உத்தரவை திருத்தம் உள்ளது குறித்து மனு, பிரமாண வாக்குமூலங்கள் ஆகியவற்றில் பக்கம் 103-106 ல் உள்ள விவரங்கள் உங்களுக்கு தெரியுமா என்றால், எனக்கு அதைப் பற்றி தெரியாது. போலீஸ் விசாரணையில் பிரிவு 161(3) ல் கூறியுள்ள வாக்குமூலங்கள் உண்மையானதா என்றால், உண்மை. போலீசார் உங்களை எப்போது விசாரித்தார்கள் என்றால், 31.03.2022 ம் தேதியன்று விசாரித்தார்கள்.

6 CD பதிவிறக்கம் செய்ததில் எத்தனை நகல்கள் எடுக்கப்பட்டது என்றால், 1 நகல் எடுக்கப்பட்டது. 31.03.2022 ல் உங்களது பணி என்னவென்றால், System Analist and Computer Section Incharge பணி செய்து வந்தேன். இந்நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல உங்களுக்கு எப்போது சம்மன் வந்தது என்றால், அது எனக்கு நியாபகம் இல்லை. 13.11.2024 ம் தேதியன்று சாட்சி சொல்ல வந்துவிட்டு, பாதியில் சாட்சி சொல்லாமல் சென்றதற்காக காரணம் என்ன என்றால், வழக்குக் கோப்பில் CD நகல் இல்லை.

நீங்கள் பிறந்த ஊர் எதுவென்றால், பள்ளிபாளையம் ஆகும். தற்போது எங்கு வசித்து வருகிறீர்கள் என்றால், பள்ளிபாளையத்தில் வசித்து வருகிறேன். புலன் விசாரணை அதிகாரி மாண்பமை மாவட்ட முதன்மை நீதிபதியிடம் கொடுத்த விண்ணப்பத்தில் உள்ள விவரங்கள் உங்களுக்கு தெரியுமா என்றால், தெரியும். அதில் என்ன விவரம் எழுதியுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால், பவானி உரிமையியல் நீதிமன்றத்தில் தலைமை எழுத்தர் மற்றும் அதன் நடைபாதை தொடர்பான CCTV பதிவுகளை கேட்டிருந்தார்.

பவானி நீதிமன்ற வளாகத்தில் எத்தனை CCTV உள்ளது என்றால், தெரியும். ஆனால் எண்ணிக்கை நினைவில்லை. நீதிமன்ற வளாகத்தில் CCTV கேமிரா எங்குள்ளது என்றால், நுழைவு வாயிலில் உள்ளது. நீதிமன்றத்தின் கணினியில் உள்ள ஆவணங்களை தற்போது எடுத்துத் தர முடியுமா என்றால், முடியாது. காவல் துறை ஆஜர்படுத்திய முதல் சாட்சி திருமதி.சாந்தி இவ்வழக்கில் தாக்கல் செய்த புகார் மனுவை நீதிமன்றத்தில் கணினியில் டைப் செய்ததாக தெரிவித்துள்ளார், அந்த கணினியில் டைப் செய்துள்ள மனுவை உங்களால் எடுத்துத் தர முடியுமா என்றால், முடியாது. நீதிமன்றத்தின் வழக்கின் நிலையை நகல் எடுத்து தர முடியுமா என்றால், முடியும்.

CMP.No.9869/2013 மற்றும் CMP.No.10510/2013, குற்றவியல் நீதிமன்றம் எண்.1 பவானி, O.S.No.147/2013, I.A.No.1452/2013 IA.No.1453/2013. IA.No.557/2013 ஆகிய வழக்குகளின் நிலையை பிரிண்ட் எடுத்துத் தர முடியுமா என்றால், 2013 ம் வருடம் என்பதால் அதை பதிவிறக்கம் செய்வது என்பது முடியாது. CMP.No.5476/2022, FIR.No.120/2022 மற்றும் STC.No.703/2022 ஆகியவற்றை குற்றவியல் நீதிமன்றம் எண்.1 பவானி, வழக்கின் நிலையை எடுத்து தர முடியுமா என்றால், முடியும். CMP.No.799/2021, குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2, கோபி நீதிமன்றத்தில் வழக்கின் நிலைய எடுத்து தர முடியுமா என்றால், முடியும். FIR No.30/2019 உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், நெய்வேலி ஆகியவற்றின் நிலையை எடுத்து தர முடியுமா என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது.

மேற்படி சான்றுப் பொருட்களை, 24.03.2022 தேதியின் 02.45-03.00 மணி வரையிலான காணொளி திறந்த நீதிமன்றத்தில் ஒளிப்பரப்பப்பட்டது.  அதில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால், சரிதான்.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.